# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜூலை 20, 2024 Weekly E-paper • July 20, 2024


# கயிறு கைகளுக்கா, கழுத்துக்கா?

சுப. வீரபாண்டியன்





## திராவிட மாணவர் பேரவையின் நீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

## எவ்வளவு காலம் நீடிக்கும்?

தலையங்கம்

## பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி

நூல் அறிமுகம்: வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூலை 20, 2024 Weekly E-paper ● July 20, 2024


## கயிறு - கைகளுக்கா, கழுத்துக்கா?

**சுப. வீரபாண்டியன்**

சாமி கயிறு, காசிக் கயிறு, காத்து கருப்பு அண்டாமல் இருப்பதற்கான கயிறு என்று பல்வேறு விதமான நோக்கங்களில் கைகளில் கயிறுகளைக் கட்டி இருப்பவர்களைப் பார்க்கலாம். இப்போது தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் வெவ்வேறு வண்ணங்களில், பள்ளி மாணவர்கள் உள்பட, பலரும் கயிறு கட்டி இருக்கிறார்கள். இந்தக் கயிறுகள் கடவுள், மதம் தொடர்புடையவை அல்ல. சாதியின் அடையாளங்கள்!



இந்தக் கயிறுகள், தென் மாவட்டங்களில் மாணவர்களிடையே பல சாதி மோதல்களுக்கு வழிவகுத்துக் கொண்டிருக்கின்றன. சாதியின் பெயரால்தான், நாங்குநேரியில் சின்னத்துரை என்னும் பள்ளி மாணவனும், அவன் தங்கையும் வெட்டுப் பட்டார்கள். எனவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று எண்ணி, தமிழ்நாடு அரசு நீதிபதி சந்துரு அவர்களைக் கொண்டு, இது பற்றி ஆராய, ஒரு நபர் குழுவை அமைத்தது.

அந்தக் குழுவின் அறிக்கையை, நீதிபதி அவர்கள் அண்மையில் நம் முதலமைச்சரிடம் சமர்ப்பித்தார். அதனுடைய சாரம் செய்தித் தாள்களில் வெளிவந்திருந்தது. அது ஒரு நீண்ட அறிக்கை. 680 பக்கங்களைக் கொண்டது!




கைகளில் கட்டப்படும் கயிறுகள், சாதி மோதல்களுக்குக் காரணமாகிச் சிலர் கொல்லப்படவும் பின்புலமாக இருந்திருக்கிறது என்பதால், அதனைத் தடை செய்ய வேண்டும் என்று நீதிபதியின் அறிக்கை பரிந்துரை செய்கிறது. கைகளில் கட்டப்படும் கயிறு கழுத்தில் மாட்டப்படும் தூக்குக் கயிறாக ஆகிவிடக் கூடாது என்னும் நோக்கத்தில் அந்த அறிக்கை அவ்வாறு கூறுகின்றது!

எல்லாவற்றையும் எதிர்க்கும் பாஜகவின் மாநிலத் தலைவர் அண்ணாமலை, இதனையும் எதிர்த்திருக்கிறார். நீதிபதி தன் சொந்தக் கருத்துகள் பலவற்றை அறிக்கையில் சேர்த்திருப்பதாகவும், அண்ணல் அம்பேத்கரின் வரிகளைத் தொடக்கத்தில் மேற்கோள் காட்டி இருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

ஏற்கனவே 20 ஆயிரம் புத்தகங்களைப் படித்திருக்கிற அண்ணாமலை அவர்கள், இந்த அறிக்கையையும் முழுமையாகப் படித்து விட்டாரா என்று தெரியவில்லை. அல்லது படிக்காமலேயே இப்படி ஒரு கருத்தைச் சொல்கிறாரா என்றும் சந்தேகப்பட வேண்டி இருக்கிறது! அடுத்ததாக, அம்பேத்கரின் வரிகள் மேற்கோள் காட்டப்பட்டு இருக்கின்றன என்பதற்காக அண்ணாமலை வருத்தப்படுவது வேடிக்கையாக இருக்கிறது. அவர் தலைமையில் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டத்தின் பெயரில்தான், அவர்கள் கட்சியினரும் சட்டமன்றங்கள், நாடாளு மன்றத்தில் உறுதி எடுத்து இருக்கிறார்கள் என்பதை இங்கு நினைவூட்ட வேண்டி இருக்கிறது!

நீதிபதியின் அறிக்கையை நிராகரிக்கிறேன் என்றால் என்ன பொருள்? நாடெங்கும் சாதிச் சண்டைகள் மூள வேண்டும் என்று அவர் கட்சி விரும்புகிறதா? அப்படிக் கலவரங்கள் மூண்டால்தான், அதனைக் காரணம் காட்டி, சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று சொல்லி, ஆட்சியைக் கலைத்து விட முடியும் என்று கருதுகிறார்களா?

எதிர்க்கட்சி என்றால் எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டும் என்று அண்ணாமலைக்கு யார் சொல்லி கொடுத்தார்களோ தெரியவில்லை!

நமக்கு அண்ணாமலையை விட, அவர் சார்ந்திருக்கும் கட்சியை விட, இந்த நாடு பெரியது! இந்த நாட்டையும், இந்த நாட்டின் அமைதியையும் காப்பாற்ற வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் இருக்கிறது! தமிழ்நாடு அரசுக்கு மிகக் கூடுதலாக இருக்கிறது!! ●

# திராவிட மாணவர் பேரவையின் நீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்! 15-07-2024

## மேற்கு மண்டலம்






மேற்கு மண்டலம்: திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் காசு. நாகராசன் ஒருங்கமைத்துத் திராவிட மாணவர் பேரவையின், கோவை நீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமையேற்ற திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராசு, திராவிட நட்புக் கழகத் தலைவர் ஆ. சிங்கராயர் ஆகியோர் நீட் எதிர்ப்புக் கண்டன உரையாற்றினர். தோழமை அமைப்புகளான திராவிடத் தமிழர் கட்சித் தலைவர் வெண்மணி, தமிழ்ப்புலிகள் கட்சித் தலைவர் நாகை.திருவள்ளுவன், ஆதித்தமிழர் பேரவை பொதுச் செயலாளர் கோவை இரவிக்குமார், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்டச் செயலாளர் தங்கராசு, திராவிட மக்கள் இயக்கம் சார்பில் கவிஞர் ரகுபதி, திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சபரிகிரி ஆகியோரும் கண்டன உரையாற்றினர்.

## தெற்கு மண்டலம்

தெற்கு மண்டலம்: மதுரையில் நடைபெற்றத் திராவிட மாணவர் பேரவையின் நீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்குத் தென்மண்டலத் துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம.வைரமுத்து தலைமை தாங்கினார். பேரவை அமைப்புச் செயலாளர் ப.புலேந்திரன், மாநில இளைஞரணிச் செயலாளர் இரா. சந்தானம், கொள்கை பரப்புச் செயலாளர் கி. இரவிச்சந்திரன், தலைமைக்குழு உறுப்பினர் மா. கருப்பையா, மற்றும் தி.மு.கழகம், காங்கிரஸ், தி.க, வி.சி.க, DYFI தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். நிறைவில் பேரவையின் அறிவுரைக்குழு உறுப்பினர் புலவர் இரா. ஜெயபால் சண்முகம் நீட் எதிர்ப்புக் கண்டன உரையாற்றினார்.






## கிழக்கு மண்டலம்




கிழக்கு மண்டலம்: திருவாரூரில் நடைபெற்ற நீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்குக் கிழக்கு மண்டலத் துணைப் பொதுச் செயலாளர் மரைக்காயர் மு.சேக்தாவுத் முன்னிலை வகிக்க, தலைமை தாங்கிய திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் நீட் எதிர்ப்புக் கண்டன உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் கு.சுதாகர், மாவட்டத் துணைச் செயலாளர் ம.வேல்முருகன், நாகை மாவட்ட அமைப்பாளர் இர. மணிமாறன், ஒன்றியத் தலைவர் புலிவலம் A. தேவா, த.பெ.தி.க. டெல்டா மாவட்டச் செயலாளர் ப.வ.பெரியார் செல்வம், பேரவை மாவட்டத் துணைச் செயலாளர் ம.வேல்முருகன், வி.சஞ்சீவிகுமார் உள்ளிட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு தம்எதிர்ப்பை வன்மையாகத் தெரிவித்தனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## எவ்வளவு காலம் நீடிக்கும்?

கடந்த பொதுத்தேர்தலில் பா.ஜ.கவுக்குப் பெரும்பான்மை பலத்தைக் கொடுக்காமல் 'மைனாரிட்டி' அரசாக உட்கார வைத்து விட்டார்கள் மக்கள்.

பா.ஜ.க. வுக்குத் தெலுங்கு தேசமும், ஐக்கிய ஜனதா தளமும் முட்டுக் கொடுத்துக் கொண்டு இருக்கிறன.

மாநிலங்கள் அவையில் மசோதா நிறைவேற 113 உறுப்பினர்கள் ஆதரிக்க வேண்டும்.

இதில் மாநிலங்கள் அவையில் ராகேஷ் சின்கா, ராம்சகல், சோனல் மான்சிங், மகேஷ் ஜெத்மலானி ஆகிய நான்கு நியமன உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிந்ததால் பா.ஜ.கவின் பலம் 86 ஆகக்குறைந்து விட்டது.

இது இப்படி என்றால் பா.ஜ.கவின் நம்பிக்கையான 80 தொகுதிகளைக் கொண்ட உத்தரப் பிரதேசத்தில் 36 தொகுதிகளில் வெற்றிபெற முடிந்தது.

அதிலும் கடந்த தேர்தலில் வாரணாசியில் 6லட்சத்து 76 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வென்ற பிரதமர் மோடி, இம்முறை 1.52 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வாக்குகள் சரிந்து வெற்றி பெற்றுளார்.

அயோத்தி ராமர் கோயிலை உள்ளடக்கிய பைசாபாத் தொகுதியில் பாஜகவை வீழ்த்தியது சமாஜ்வாதி கட்சி, இங்கே ராமரும் கூட காப்பாற்றவில்லை.

உ.பி.யில் முதல்வர் ஆதித்யநாத், துணை முதல்வர் கே.பி.மவுரியா இடையே கடுமையான மோதல் முற்றுவதாகத் தெரிகிறது.

கே.பி. மவுரியா, ஆதித்யநாத்தை நோக்கிச் சொல்கிறார், "ஆட்சியைவிட கட்சியே முக்கியம்" என்று. ஆதித்தியநாத் முதல்வர் பதவியை விட்டுத்தரத் தயாரில்லை. இவர்களின் 'கோஷ்டி' மோதல், விரைவில் வர இருக்கும் உ.பியின் 10 தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் என்ன ஆகுமோ என்று கன்னத்தில் கைவைத்துக் கொண்டிருக்கும் நட்டாவிடம் சென்று மோடி, அமித்ஷா வரை பஞ்சாயத்து போயிருக்கிறது.

சரி! ஆட்சியாவது எவ்வளவு காலம் நீடிக்கும் என்று பார்ப்போம்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408




இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பாக இரண்டு நூல்களின் அறிமுகக் கூட்டம், புதுக்கோட்டை, மருத்துவர் ஜெயராமன் பல்மருத்துவ மனை மேல்தளத்தில் நடைபெற்றது. 13-07-2024 அன்று நடைபெற்ற இக்கூட்டத்திற்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தஞ்சை மாவட்டச் செயலாளர் செல்லக் கலைவாணன் தலைமை தாங்க, தோழர் சொக்கலிங்கம் வரவேற்புரை ஆற்றினார். தோழர் திராவிடச் செல்வி முன்னிலை வகிக்க, 'தமிழுக்கு என்ன செய்தார் கால்டுவல்' என்ற நூல் குறித்த அறிமுக உரையை மருத்துவர் ஜெயராமனும், 'தி.மு.க. ஆட்சியில் மாநில சுயாட்சித் தீர்மானம்' என்ற நூல் குறித்த அறிமுக உரையை வழக்கறிஞர் இராம. வைரமுத்துவும் நிகழ்த்தினார்கள். கூட்ட நிறைவில் நன்றி கூறினார் தோழர் சரவணன்.


# பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி

நூல் அறிமுகம்

வெற்றிச்செல்வன்

ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு பண்பாடு அடையாளமாக இருந்து வருகிறது. சமூகத்தின் இயங்கியலுக்கு பண்பாடு அடையாளமாகவும், அவசியமானதாகவும் இருக்கிறது.

தமிழர்களின் பண்பாடு திணை சார்ந்ததாக, பண்டைத் தமிழகத்தில் இருந்தது. அறம் சார்ந்த வாழ்வியல் விழுமியங்களைத் தன்னுள் அடக்கியிருந்தது சங்க இலக்கியம். பின்னாளில் ஆரியர் ஆதிக்கம் காரணமாக, வருணாசிரமக் கோட்பாடு தலைதூக்கியது. தமிழர்களின் ஒற்றுமை சிதைக்கப்பட்டது. தமிழர்கள் ஜாதிகளாய்ப் பிரிந்தனர். ஜாதி சார்ந்த பண்பாட்டு அடையாளங்கள் கவனம் பெறத் தொடங்கின. என்றாலும் தமிழர்களை ஒன்றிணைக்கும் பண்பாட்டு அடையாளங்கள் இல்லாமல் போகவில்லை. அதனைத் தமிழருக்கு உணர்த்தி, தமிழரைத் தலைநிமிரச் செய்ததே பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி. பெரியாரின் அத்தகைய பணிகளை விவரிப்பதே இந்நூலின் நோக்கமாக அமைந்துள்ளது.




உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தந்தை பெரியாரைப் பற்றி, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி ஆற்றிய சொற்பொழிவே இந்நூலாக வடிவம் பெற்றுள்ளது. தமிழினத்திற்குத் திராவிடர் என்ற அடையாளத்தை வழங்கியதே பெரியாருடைய பண்பாட்டுப் புரட்சியின் தொடக்கம் என்கிறார் நூலின் ஆசிரியர்.

மானுடப் பற்றையே முதன்மையாகக் கொண்ட பெரியார், திராவிடர், தமிழர், தமிழர்தம் மொழி, பண்பாடு ஆகியவை குறித்துப் பேசியது சுயமுரண்பாடா என்ற கேள்வியை எழுப்பி, அதற்கான விடையையும் அளித்துள்ளது இந்நூல்.

"ஒரு மனிதனை அவனிருக்கும் சிறையிலிருந்து விடுதலை செய்துகொண்டு வரவேண்டும் என்று விரும்பும் எவரும், முறைப்படி அவன் எந்த வழியில் சிறைக்குள் சென்றானோ அதே வழியில், அதே வழியின் மூலம்தான் வெளியே கொண்டு வரவேண்டும். அதை விடுத்து வேறு வழிகளில் வந்தால் அந்த விடுதலை அவனுக்கு நீடிக்குமா? நிலைக்குமா?" எனவேதான் பண்பாட்டுப் புரட்சி என்பது அவசியமாகிறது.

தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களை மீட்டெடுத்து, அவற்றின் அவசியத்தைத் தமிழருக்கு உணர்த்தியவர் பெரியார். அறிவுக்கு ஒவ்வாத ஆபாசக் கதைகளைக் கொண்ட தீபாவளியினைத் தமிழர்கள் கொண்டாடுவதைக் கைவிட்டு, உழைப்பின் அருமையை உணர்த்தும் அறுவடைத் திருவிழாவான பொங்கலைக் கொண்டாடச் சொன்னார் பெரியார்.

புராணக் குப்பைகளை ஒதுக்கி வைக்கச் சொன்ன பெரியார், திருக்குறளைக் கொண்டாடினார். திருக்குறள் மாநாடு நடத்தினார். புலவர் வீட்டுப் புத்தக அலமாரியில் இருந்த திருக்குறளைத் தமிழர்கள் இல்லந்தோறும் கொண்டு போய்ச் சேர்த்தார். இசை மேடைகள் அனைத்தும் பார்ப்பனர்களால் ஆதிக்ம் செலுத்தப்பட்டபோது, தமிழிசையை வளர்ப்பதே தமிழர் கடமை என்ற பிரச்சாரத்தைக் கையில் எடுத்தார்.

சுயமரியாதைத் திருமணங்கள் என்ற புதிய முறையைப் புகுத்தி, அடிமைத்தனம் ஊட்டும் பார்ப்பனியச் சடங்குகளில் இருந்து தமிழர் மீட்சி பெற வழிவகை செய்தார். இதுதான் பெரியார் நிகழ்த்திய பண்பாட்டுப் புரட்சி. அது ஜாதி, மதங்களைத் தாண்டிய புரட்சி! தமிழர் என்ற அடையாளத்தை மீட்டெடுத்த புரட்சி! இவற்றைக் குறித்து விரிவாக விளக்கும் இந்நூலை நாம் அனைவரும் படித்துப் பயனுற வேண்டும்.

நூல் : பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி
ஆசிரியர் : கி. வீரமணி
வெளியீடு : பெரியார் சிந்தனை உயராய்வு மையம்.
விலை : ரூ.100